கலைஞர் 100
1924 - 2023

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச
சிறுதானிய ஆண்டு
2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர், தேதி: 05.11.2025
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் காலநிலைக்கு ஏற்ற ஊட்டச்சத்து நிறைந்த பயிர்கள் மற்றும் ஆரோக்கிய நன்மைகள் என்ற தேசிய பயிலரங்கு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், மாறிவரும் காலநிலைக்கு ஏற்ற உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக கிராண்ட் சேலஞ்சஸ் கனடா நிதியுதவியுடன், "காலநிலைக்கு ஏற்ற ஊட்டச்சத்து நிறைந்த பயிர்கள் மற்றும் ஆரோக்கிய நன்மைகள்" என்ற தேசிய அளவிலான பயிலரங்கு 05.11.2025 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் முன்னணி விஞ்ஞானிகள், தொழில்முனைவோர், கல்வியாளர்கள், விவசாயிகள் மற்றும் ஆராய்ச்சி அறிஞர்கள் ஆகியோரை ஒன்றிணைத்து, காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற பயிர் பன்முகத்தன்மை மற்றும் பொது சுகாதாரம் ஆகியவற்றை ஊட்டச்சத்து பாதுகாப்போடு இணைக்கும் புதுமையான உத்திகள் குறித்து விவாதிக்கப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக, பயிர் மேலாண்மை, இயக்குனர் (பொறுப்பு), முனைவர். என். செந்தில் அவர்கள் கூட்டத்தை வரவேற்று, உணவு பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்வதில் கூட்டு ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

சர்வதேச வாழ்க்கை அறிவியல் நிறுவன (ILSI), நிர்வாக இயக்குநர், முனைவர். ரேகா சின்ஹா, அவர்களின் சிறப்பு உரையில் மரபணு மற்றும் மரபணு திருத்தும் கருவிகளின் உருமாற்றத் திறனை எடுத்துரைத்தார். மேலும் அத்தியாவசிய வைட்டமின்கள், நார்ச்சத்து மற்றும் நுண்ணூட்டச்சத்துக்கள் செறிவூட்டப்பட்ட பயிர் இரகங்களின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தி, நிலையான ஊட்டச்சத்தை ஊக்குவிப்பதில் அறிவியல் மற்றும் கண்டுபிடிப்புகளின் முக்கிய பங்கை எடுத்துக்காட்டினார்.

இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு, புது தில்லி, விஞ்ஞானி, முனைவர். கே. கதிர்வேலு, அவர்கள் 2047 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை பசியற்ற மற்றும் ஆரோக்கியமான தேசமாக மாற்றவும் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்தவும் முன்கணிப்பு விமான இயந்திர அமைப்புகள் மற்றும் உயிர் உணரிகள் போன்ற உலகளாவிய தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளின் அவசியத்தை வலியுறுத்தினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் மற்றும் துணைவேந்தர்(பொறுப்பு), முனைவர் இரா. தமிழ்வேந்தன், அவர்கள் தொடக்க உரையை நிகழ்த்தி, தரமான உலகளாவிய பயிர் உற்பத்தித்திறனின் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை வலியுறுத்தி, ஊட்டச்சத்து பற்றாக்குறையை எதிர்த்துப் போராட இரும்பு, துத்தநாகம் மற்றும் சுண்ணாம்பு சத்து நிறைந்த சிறுதானியம் மற்றும் பயறு வகைகளை ஊக்குவிக்க வலியுறுத்தினார். விவசாய மீள்தன்மையை மேம்படுத்த பூச்சி முன்னறிவிப்பு அமைப்புகள், இடர் மேலாண்மை கருவிகள் மற்றும் விவசாயிகளுக்கான பயிற்சித் திட்டங்களின் முக்கியத்துவத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

அவரை தொடர்ந்து, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர். வெ.கீதாலட்சுமி அவர்களின் உரையில், அதிகரித்து வரும் உலக மக்கள் தொகை, வறட்சி மற்றும் உப்புத்தன்மையைத் தாங்கும் பயிர்கள், மீநுண் உரங்கள், நுண்ணுயிர் தொழில்நுட்பங்கள் மற்றும் நிலையான உணவு முறைகளை உறுதி செய்வதற்காக சிறுதானியம் சார்ந்த ஊட்டச்சத்து தோட்டங்களை உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதை தொடர்ந்து, "காலநிலை மாற்றம் மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு" என்ற தலைப்பில் ஆங்கில நூலை முனைவர். தமிழ்வேந்தன், பதிவாளர் மற்றும் துணைவேந்தர் (பொறுப்பு), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள் வெளியிட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர். வெ.கீதாலட்சுமி அவர்கள் பெற்றுக்கொண்டார்.

வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், பேராசிரியர் மற்றும் தலைவர், முனைவர் ந.க. சத்தியமூர்த்தி,அவர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றிய விஞ்ஞானிகள், பங்கேற்பாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்து நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.

*மக்கள் தொடர்பு அலுவலர்*